மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாச்சார அடிப்படையில் வேலை வாய்ப்பு.

*வினா எண். 5 :—திரு. வி. கொ. சின்னசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பணியாளர் தேர்வுக்குழுவில் தேர்ந்தெடுக்கும் பொழுது, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தை ஒதுக்கும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. உரொ. எட்மண்ட் : பிற்பட்ட வகுப்பினரிடையேயுள்ள மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்காக அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும் தனியான ஒதுக்கீடு செய்வதுபற்றிய செயற்குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஜனத் தொகையில் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளோர் சதவீகிதம் எவ்வளவு? மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் எந்த எந்த சமுதாயத்தினர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிப்பார்களா ?

* மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற மொத்த மக்கள் தொகையில் மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை சதவிகிதம் என்பதைக் குறிப்பிட தற்போது என்னிடம் விவரம் இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் பிற்பட்டோர் பட்டியலில் 142 வகுப்பினர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 142 வகுப்பினரில் 39 வகுப்பினர் மிகவும் பின்தங்கிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, பிற்பட்டோர் பட்டியலின் எண்ணிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பெருகிக் கொண்டிருக்கும்போது அந்த வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் விகிதாச்சாரம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை அரசு உணரும் என்று கருதுகிறேன். அந்த நிலையில் உத்தியோகத்தில் பெரும்பாலான இடங்கள் மிகவும் மைனாரிட்டியாக உள்ள சமூகத்தினருக்குப் போய்விடுகிறது ; மெஜாரிட்டி சமுதாயத்தினருக்கு இதுவரை கிடைக்கவில்லை என்பதை இந்தச் சட்டமன்றத்திலேயே பலமுறை நான் எடுத்துச் சொல்லியும் அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, Within the backward community there is a domination of some

1979 அக்டோபர் 27]

communities who have organised themselves and availed all the benefits, Whether the Government is aware of that fact and whether the Government will come forward to give reasonable and effective protection to the majority community who remain unorganised and therefore weak.

என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே முந்திய கேள்விக்குப் பதில் சொல்லும் போது 142 வகுப்பினர் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன். இட ஒதுக்கீடுகளில் பிற்பட்டோருக்கு இத்தனை சதவீதம் என்று ஒதுக்கப்பட்டிருக்றதே தவிர, மிகவும் பிற்பட்டவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. அதை "கம்பார்ட்மெண்ட் ரிசர்வேஷன்" என்ற அடிப்படையில் அவர்களுக்குச் செய்யலாமா என்பது இன்றைக்கு அரசின் செயற்குறிப்பில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது ஒரு "டாமினேடிவ் கம்யூனிட்டி"— எந்தச் சமுதாயம் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கிறதோ அவர்களுக்குத்தான் அதிக இடம் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக 31 சதவீதம் பிற்பட்டோர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து தான் அவர்களுக்குக் கிடைக்கிறது. பிற்பட்ட சமுதாயத்தில் யாருக்குக் கொடுக்கப்பட்டாலும் இந்த விகிதாச்சாரத்திலிருந்து தான் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, முன்பு எப்போதாவது, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று தனியாகச் சலுகைகள் ஏதாவது வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலைச் சேர்ந்த சமுதாயத்தினருக்கு தனியாக சலுகைகள் எதுவும் ஒதுக்கப்பட்டிருந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இப்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தினருக்குத் தனிப்பட்ட சலுகைகள் ஏதாவது செய்யலாமா என்பதைப்பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்திலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயம் என்றிருப்பதற்குக் காரணமே பொருளாதார ரீதியில் அவர்கள் பின் தங்கிய நிலையில் இருப்பதால் தான், அவர்கள் தனியாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

VAIMAYE VELLUM TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 27

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினர் என்று 39 வகுப்பினர் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இந்த 39 வகுப்பினர்களில் எந்தெந்த இனத்தவர்கள் இருக்கிறார்கள்? தமிழகத்தில் இந்த இனத்தவர்கள் எந்த அளவுக்கு, எவ்வளவு இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு தனியாகச் சலுகைகள் அளிப்பதற்கு அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தமிழகத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் யார் யார் இருக்கிறார்கள் என்பதைக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். 39 சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று தனியாகச் சலுகைகள் எதுவும் அளிப்பதாகத் தெரியவில்லை. . . .

திரு. சி. ஆறுமுகம் : அந்த 39 இனத்தவர்களும் யார் யார் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டால் எல்லோருக்கும் நல்லது.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அந்தப் பட்டியல் நீளமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேவை என்றால் நான் தனியாக அனுப்பி வைக்கிறேன். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஏற்கெனவே அரசால் வெளியிடப்பட்டிருக்கின்ற பட்டியல் தான். இதற்காக இப்போது நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். . . .

திரு. சி. ஆறுமுகம் : படித்தால் அவைக்குறிப்பில் சேரும். அதே நேரத்தில் வெளியிலுள்ள மக்களும் இந்த விபரத்தை அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியல் எதற்காக வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இப்போதாவது அவர்களுக்கு தனியாக ஏதாவது விகிதாச்சாரம் கொடுப்பதற்கு அரசு யோசித்துக் கொண்டிருப்பதாக அறிந்து அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சீக்கிரத்தில் இதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்டோர் யார் யார் என்பது பல பேருக்குத் தெரியவில்லை. உதாரணமாக 'செட்டிநாட்டு வலையர்'' என்கின்ற இனம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறதா என்று தெரியவில்லை. இதனால் சர்டிபிகேட் வழங்குவதிலும் கஷ்டமாக இருக்கிறது

1979 அக்டோபர் 27]

'செட்டிநாட்டு வலையர்'' என்கின்ற இனத்தவர்கள் இந்தப் பட்டியலில் இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதோடு அந்தப் பட்டியலில் உள்ளது யார் யார் என்பதை இந்தச் சட்டசபையில் சொல்வது பொது மக்களுக்கு நல்லதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : 1972-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 35-வது இடத்தில் ''செட்டிநாட்டு வலையர்'' என்பது சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், அந்தப் பட்டியலை எல்லா உறுப்பினர்களுக்கும் தனியாக அனுப்பிவைப்பது நல்லது. அப்படி அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. சி. ஆறுமுகம் அவர்கள் எழுந்தார். . . .)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தான் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கும்படி சொல்லி இருக்கிறேன். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : கேள்வி கேட்பதற்குக் கூட எழுந்திருக்கக் கூடாதா ?

திரு. க. மருதாசலம் : இப்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருப்பவர்களுக்கு தனிச் சலுகைகள் அளிப்பது குறித்து பரிசிலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி பரிசீலனை செய்கின்ற காலம் நீண்டு கொண்டேயிருக்கிறது. துரிதமாக இதைப் பரிசீலனை செய்வதற்கு அரசு ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : அதுபற்றி விரைவில் முடிவு எடுப்பதற்காகத்தான் ஒரு தனி அதிகாரியை அரசு நியமித்திருக்கிறது.

திரு. வி. கோ. சின்னசாமி : தமிழகத்தில் எத்தனை சதவிகிதத்தினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் இருக்கிறார்கள் என்பதைக் கேட்டேன். அமைச்சர் அவர்கள் அந்தத தகவல் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதை எப்போது அமைச்சர் அவர்கள்தெரிவிப்பார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காகத்தான் அந்தப் பட்டியலை எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9-20.)

திரு. கோ. இளங்கோவன் : மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதப்படுகிற சலவைத் தொழிலாளர்கள் தங்களுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அளிக்கப் பெற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக் கிறார்களா? ஆமெனில், அதுபற்றி அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சலவைத் தொழி லாளர்கள் மாத்திரமல்ல. இன்னும் சில சமுதாயத்தைச் சேர்ந்த வர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து தங்களைத் தாழ்த்தப்பட்டோர் சமுதாயப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்கும் அந்த அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறதேயொழிய மாநில அரசுக்கு இல்லை.

திரு. ப. சந்திரன் : மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கல்விச் சலுகைகள் பொறுத்தமட்டில் ட்யூஷன் பீஸ் பாதிக் கட்டணச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. அப்படி கொடுக்கப்பட்டு வந்த சலுகை தொடர்ந்து கொடுக்கப்படுகிறதா? அதேபோல் கல்லூரிகளில், அதுவும் தொழில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கிறபோது மிகவும் பிற்படுத்தப்பட்டவர் களுக்கு பிரத்தியேகச் சலுகை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சலுகைகளைப் பொறுத்த மட்டில் இவற்றில் எந்தவிதமான பாகுபாடும் இருப்ப தாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புள்ளி விவரங்களோடு சில விவரங்களைக் கேட்கிற காரணத்தால் தனியாகக் கேள்வி கேட்டால் அதுபற்றிய விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்தப் பிரச்னை குறித்து ஆய்வு செய்ய ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அதிகாரி எந்தெந்தப் பிரச்னைகள் குறித்து ஆய்வு செய்வார். அவர்களுடைய டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்ன ? ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ள 39 பிரிவினர்களின், அதுமாதிரி வேறு பிரிவினர்கள் பற்றியும் ஒரு 'பெர்ஸ்பெக்டிவ் அஸெஸ்மெண்ட்' செய்து புதிய முறையில் ஒரு பட்டியல் தயார்செய்து உடனடியாக 'ப்ரப்போர்ஷனல் ரெப்ரஸென்டேஷன்' என்ற அளவில் அரசு உத்தரவிட முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; 1969-ம் ஆண்டு திரு. ஏ. என். சட்டநாதன் தலைமையில் நியமிக்கப்பட்ட முதல் பிற்பட்டோர் நல பரிசீலனைக் குழு ஒரு அறிக்கை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் ஏறத்தாழ 110 சிபார்சுகளை அவர்கள் செய் திருக்கிறார்கள். பல சிபார்சுகள் இன்றைய தினம் அரசால் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருசில சிபார்சுகள் பொருளாதார நெருக்கடி காரணமாக அல்லது சட்டச் சிக்கல்கள் காரணமாக இன்னும் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. சட்டநாதன் குழு தன் அறிக்கையை சமர்ப்பிக்கும்போது பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களின் நிலைமைகளை அறிந்து அவற்றில் சீர்திருத்தம் செய்வதற்கு குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை புதிய குழு அமைக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதன் அடிப்படையில் புதிதாக இரண்டாவது பிற்பட்டோர் நலக்குழு அமைப்பதற்கு பிற்பட்டோர் பட்டியலில் இருக்கிற ஒவ்வொரு சமுதாயத்தையும் பற்றிய தகவல்களைச் சேகரிப்தற்குத்தான் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் நியாய விலைக் கடைகள்.

*வினா எண் 6—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

தஞ்சை மாவட்டத்தில் Civil Supplies Corporation மூலமாக எத்தனை நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன, வட்டவாரியாக ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தஞ்சை மாவட்டத் தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1,040 நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட படி வட்ட வாரியாக திறக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்.	தாலூக்காவின் பெயர்.	திறக்கப்பட்ட நியாயவிலைக் கடைகள்.
(1)	(2)	(3)
1	தஞ்சாவூர்	76
2	ஒரத்தநாடு	42
3	பட்டுக்கோட்டை	48